# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2048/39 - 2017 දෙසැම්බර් මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.12.07

*2048/ 39 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 63.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டப் பிரிவு 12 (2) ஆம் வழிகாட்டியில் பகிரப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக, அனைத்து உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகத்தர் மற்றும் வியாபாரியானவர் 250 வோல்ற்றளவுக்கு மேற்படாத கீழ்வரும் பொருட்கள் மற்றும் வகைகளை இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இ. க. (SLS) தயாரிப்புச் சான்றிதழ் குறியீடு அன்றி உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விநியோகப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல், விற்பனைக்காக வெளிப்படுத்தல் அல்லது விற்பனைக்காக சமர்ப்பித்தல், மொத்த விற்பனை செய்தல், அல்லது சில்லறை விற்பனை செய்தல் முடியாததாகும்.

| | பொருட்கள் மற்றும் வகைகள் | இ. க. (SLS) |
|---|---|---|
| (i) | மின் வடத்தை மாற்றக்கூடிய மற்றும் மின் வடத்தை மாற்ற முடியாத மின்சார செருக்கிகள் | இ. க. 734: பகுதி 1 |
| (ii) | ஆளிகள் போடப்பட்ட, ஆளிகள் போடப்படாத தாங்குகுழி வெளிவழிகள் மற்றும் நீட்டிப்பு வடங்கள்/எடுத்துச் செல்லத்தக்க மின் குதைகுழிகள் | இ. க. 734: பகுதி 2 |
| (iii) | தாங்குகுழி வெளிவழிகளுடைய பொருந்துகை, ஒன்றுக்கு ஒன்றான மாற்றக்கூடிய தாங்குகுழி வெளிவழிகளுடைய பொருந்துகை | இ. க. 734: பகுதி 3 |
| (iv) | இணைப்பு அலகுகள் (ஆளியுள்ள மற்றும் ஆளியற்ற) | இ. க. 734: பகுதி 4 |
| (v) | உருகியுடனான மாற்றக்கூடிய மின்சார செருக்கிகள் | இ. க. 734: பகுதி 5 |
| (vi) | மின்சார செருக்கிகள் மற்றும் தாங்குகுழி வெளிவழி இணைப்பான்களுடனான கம்பி வடச் சுருள் | இ. க. 1532 |

இவ்வழிகாட்டியானது 2019, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பாவனையாளர் விவகார அதிகாரசபை ஆணை மூலமாக.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ஹசித்த திலகரட்ன,
தவிசாளர்.

கொழும்பு,
2017, திசெம்பர் 07.

12- 755/1


1A - PG 3805 — 207 (2017/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

பணிப்புரை இல. 64.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

*12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டப்பிரிவு 12 (2) ஆம் வழிகாட்டியில் பகிரப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக, அனைத்து உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகத்தர் மற்றும் வியாபாரியானவர் 250 வோல்ற்றளவுக்கு மேற்படாததும் இ. க. 734 : பகுதி 1 (SLS 734: Part 1) தரக்கட்டுப்பாட்டுக்கு இணங்காததுமான மின்சார செருக்கிகளுடன் கூடிய ஏதேனும் மின்சாதனங்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விநியோகப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல், விற்பனைக்காக வெளிப்படுத்தல், அல்லது விற்பனைக்காக சமர்ப்பித்தல் மொத்த விற்பனை செய்தல், அல்லது சில்லறை விற்பனை செய்தல் முடியாததாகும்.*

*இவ்வழிகாட்டியானது 2019, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பாவனையாளர் விவகார அதிகாரசபை ஆணை மூலமாக.*

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ஹசித்த திலகரட்ன,
தவிசாளர்.

கொழும்பு,
*2017, திசெம்பர் 07.*

*12- 755/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.